மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உரிய காலத்தில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்று. உறுப்பினர் கூறிய குறைபாடுகளைக் களைவதற்குத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சில மாதங்களுக்கு முன்பு 'பப்ளிக் க்ரீவன்ஸஸ் டே' என்ற ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அறிஞர் அண்ணா அவர்கள் வந்து துவக்கி வைத்தார்கள். அதிலே பல யோசனைகளை சட்ட மன்ற உறுப்பினர்களும், வந்திருந்த உயர்தர அதிகாரிகளும் கூறியிருக்கிறார்கள். அங்கு கூறப்பட்ட யோசனைகளை மேற்கொண்டு கிரீவன்ஸஸைப் போக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ? அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு எந்த இலாகாவுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த யோசனைகளையெல்லாம் புதிய அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான் படித்துப் பார்த்து எந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆராய்வேன்.

மன்னார்குடியில் தீயணைக்கும் பணியாளர்களுக்கு வீட்டு வசதி.

*73 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்திலுள்ள தீ அணைப்பு நிலையத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தங்குவதற்கும், வண்டிகள், மற்ற சாதனங்களை ஒழுங்குடன் பாதுகாத்து வைப்பதற்கும் முறையான கட்டட வசதி செய்ய உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி தீயணைப்பு நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

மன்னார்குடி தீ அணைப்பு நிலையத்தில் வண்டியை விட்டு வைப்பதற்காக உள்ள இரண்டு இடங்களின் மேற் கூரை, ஓலை வேயப்பட்டதாகும். வண்டிகளையும் மற்ற சாதனங்களையும் ஒழுங்காகப் பாதுகாக்க, இந்த ஓலைக் கூரைக்குப் பதிலாக ரூ. 9,500 செலவில் வலுவேற்றிய கற்கலவைக் கூரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை 1968-69-ற்கான கட்டிடப் பணித் திட்டத்தில் தீயணைப்புப் படை இயக்குனர் சேர்ந்துள்ளார்.

விளம்பரத் துறையைச் சேர்ந்த பிரசார வண்டிகள்

* 79 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளம்பர இலாகாவில் மாவட்டவாரியாக இருந்த பிரசார வண்டிகளைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?